உ

சிவகுகமயம்.

C. KRISHNAMOORTHY MUDALIAR
27 MAY 1943
SHIYALI.

பழநி ஆண்டவர்

பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம்

வெளியீடு

பழநி மலையும் கோயிலும்

சித்திரபானு

பங்குனி உத்திர மலர்.

21-3-1943.

ஆசிரியர் :

திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்.,

உதவி ஆசிரியர் :

சிவத்திரு : ஈசான சிவாசாரியர்.

ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம் காரியாலயம்,

பழநி.

உரிமை தேவஸ்தானத்திற்கு. தனிப்படி அ. 2.

1943.

பழநி ஆண்டவர்

உள்ளுறை

பங்குனி உத்திர மலர்.

	பக்கம்
பழநித் திருப்புகழ்	1
பங்குனி உத்திர மலர்	4
நான் யார்?	5
செய்தித் திரட்டு	8
அன்பர்பணி	10
'பழநி ஆண்டவர்' வாழ்த்து	11
பழநிப் பெரியார்கள்	12
பழநி முத்துக்குமாரசாமி வண்ணம்	13

M 44 H3
C. KRISHNAMOORTHY MUDALIAR
2 MAY 1943

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

பழநி ஆண்டவர்

பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி ஸ்வாமி தேவஸ்தான விசேஷ வெளியீடு,

1943] சித்திரபானு பங்குனி உத்திர மலர். [மார்ச்சு

பழநித் திருப்புகழ்.

சுருதிமுடி மோனஞ்சொல் சிற்பரம ஞானசிவ
சமயவடி வாய்வந்த அத்துவித மான்பர
சுடரொளிய தாய்நின்ற நிட்கள சொரூபமுத -
லொருவாழ்வே

துரியநிலை யேகண்ட முத்தரித யாகமல
மதனில்விளை யானின்ற அற்புதசு போதசுக
சுயபடிக மாவின்ப பத்மபத மேஅுடைய உணராதே-

கருவிலுரு வேதங்கு சுக்கிலநி தானவளி
பொருமஅதி லேகொண்ட முக்குணவி பாகநிலை
கருதவரியாவஞ்ச கக்கபட மூடியுடல் வினைதானே-

கலகமிடவேபொங்கு குப்பைமல வாழ்வுநிச
மெனவுழலு மாயஞ்செ னித்தகுகை யேஉ றுதி
கருதசுழ மாமிந்த மட்டைதனை யாளஉன - தருள்தாராய்;

ஒருநியம மேவிண்ட சட்சமய வேதஅடி
முடிநடுவு மாயண்ட முட்டைவெளி யாகியுயி
ருடலுணர்வ தாயெங்கு முற்பனம தாகஅம ருளவோனே-

உததரிச மாமின்ப புத்தமிர்த போகசுக
முதவுமம லானந்த சத்திகர மேவுணர
வுருபிரண வாமந்த்ர கர்த்தவிய மாகவரு குருநாதா-

பருதிகதி ரேகொஞ்ச நற்சரண நூபுரம
தசையநிறை போண்ட மொக்கநட மாடுகன
பதகெருவி தாதுங்க வெற்றிமயி லேறுமொரு திறலோனே-

பணியுமடி யார்சிந்தை மெய்ப்பொருள தாகநவில்
சரவணப வாவொன்று வற்கரமுமாகிவளர்
பழநி மலை மேனின்ற சுப்ரமணி யாவமரர் பெருமாளே.

(போ-ரை) மறையாகமங்களின் முடிபாகவிளங்குகின்ற ஞான எல்லை எனப்படும் மோன நிலையை, உன்னையே தஞ்சமென்றடைந்து தவம்புரியும் தக்கார்க்கு உபதேசித்தருளும் முற்றறிவுடைய பெரிய பொருளே! ஞானத்துக்குக் காரணமான சைவ சமய வடிவாய் நின்று எல்லாவற்றிலும் கலந்து நிற்கும் பரம்பொருளே! ஒளிக்கு ஒளியாய் நின்ற (மாயையில் கட்டுப்படாமையால்) அருவமூர்த்தியே! (கருணையினால்) உருவமூர்த்தியே! என்றும் ஒரே தன்மையாய் நிற்பவாதலால் முதல்வரே! (ஞானமே திருமேனியாதலால்) ஒப்புயர்வு அற்றவரே! சிவபெருமான் ஒருவனே தலைவன் என்னும் கருத்தில் மாறுபடாத அகச் சமயங்களுக்குப் பற்றுக்கோடாக விளங்கும் வேதங்களின் முதல், நடு, முடிவிலும் விளங்குபவரே! கானலிலே தாகவிடாய்ப் பட்டவருக்கு வாய்த்த நல்ல தண்ணீரையொத்த இன்பத்தை அளிக்கும் புதிய அமிர்தமயமான சிவபோகப் பேரின்பப் பெருவாழ்வை வழங்கும் தூய இன்ப உருவினரே! ஞான சத்தியாகிய வேலாயுதத்தைத் தாங்குபவரே! பிரணவத்திற்குத் தலைவரே! ஆயிரகோடி கதிரோன் உதித்தாற்போல விளங்கும் தேவரீரது நல்ல திருவடிக் கமலத்தில் அணிந்துள்ள தண்டைகள் ஒலிக்க, எல்லா அண்டங்களும் அசைய, நடனம் புரிந்தருளும் பெருமை பொருந்திய திருவடிகளையுடைமையால் (தமது அடியார்கள் செருக்குற, தாம்) செருக்குற்றிருப்பவரே! பெரிய வெற்றி மயிலின்மீது ஏறிவரும் வலிமையுடையவரே! தேவரீரது திருவடிகளைவணங்கும் அடியார்களது சிந்தையில் இதுவேமெய்ப்பொருள் என்று உச்சரிக்கின்ற "சரவணபவ" என்றஆறெழுத்துக்கு உரியவரே! ஆணவ இருள்கெட ஞான ஒளிவீசும் ஓங்கார வடிவான பழநிமலைமேல் நின்ற சுப்பிரமணியப் பெருமானே! தேவர்களுக்குத் தலைவராம் பெருமைமிக்கவரே! மேலான நிலையைக்கண்ட சீவன் முத்தர்களின் இதய கமலத்தில் விளைகின்ற புதுமையான மெய்யுணர்வைத் தருவதும், இன்பத்தைத்தருவதுமான தூய படிகம்போல் நின்று இன்பத்தை விளைத்தருளும் தாமரை மலர்போன்ற தேவரீரது திருவடிகளையடையும் செந்நெறியை யுணராமல், கருவறையிலே உருவாகித் தங்கிய வெண்தாதுவானது பிராணவாயுவால்

பூரிக்க அவ்வுருவிலே பொருந்திய சாத்துவிகம், ராசசம், தாமசம் என்னும் முக்குணங்களும் (உலகெங்கணும் நிறைந் துள்ள தேவரீரது அருள் நிறைவைக் காட்டாமல்) உலகப் பொருள்களிலே (அற்ப) இன்பம், துன்பம், மயக்கமெனும் இதனையே காட்ட, இந்த முக்குணங்களை நீங்கி நிற்கும் நிலை இன்னதென்று நினைக்கவும் முடியாது, வஞ்சனை யுடன்கூடிய கபடகுணத்தால் மூடப்பெற்று (மனம், வாக்கு காயங்களால்) நாம் செய்தவினைகள் கலகம் செய்ய அதனால் மேன்மேலும் விளைகின்ற குப்பையாகிய ஆணவ மல சம்பந் தத்தால் வந்த நிலையற்ற வாழ்வையே மெய்யென்று எண்ணி மாயா குணங்களுக்குப் பிறப்பிடமான இவ்வுடலையும் இவ் வுலகிலே காணும் இன்பத்தையுமே பொருளென்று கருதி எண்ணிலாத கற்பகாலமாக எடுத்த உடம்பையே எடுத்து, உடுத்ததே உடுத்து, உண்டபொருள்களையேஉண்டு, பொய்ப் பொருளை மெய்ப்பொருள் என்றுமயங்கி உரைப்பார் உரைப் பனவற்றை மெய்யெனவே கேட்டு, அதனால் மயங்கிக்காணத் தகாதனவும் முன்பு கண்டனவுமே கண்டு, முன்பு உண்ட வைகளை வாந்திசெய்து மீள அதனையேஉண்ணும் சுணங்கன் போன்ற மட்டியாகியஇவ்வடியேனை ஆட்கொள்ளதேவரீரது திருவருளைத் தந்து காத்தருள்புரிவீராக; என்பதாம்.

கருத்துரை : மறையாகமங்களின் உச்சியிலே விளங்கும் ஞானமாகிய மௌனநிலையை அருள்பவரே! அருவம், உரு வருவம், உருவமாய்விளங்கும் ஒளிவடிவினரே! மயிலை வாக மாக வுடையவரே! ஞானசத்தியாகிய வேலாயுதத்தைத் திருக்கரத்தில் தரித்தவரே! அந்த ஞானத்தை யுணர்த்தும் ஆறெழுத்துக்குரிய பரம்பொருளே! பிரணவ வடிவான பழநிமலைமீது எழுந்தருளி யிருப்பவரே! கருவழிப்பட்டு முக்குண வசத்தனாகி, வஞ்சனையால் மூடப்பட்டு நின் திரு வடியைக் கருதாது மல வாழ்வாகிய குப்பையிலே கிடந்து ழலும் அடிநாயேனுக்கு, எல்லாவுயிர்களிடத்தும் இயல்பாக எழுந்த தேவரீரது பெருங்கருணையினாலே, தேவரீரது திரு வடிகளையே தஞ்சமென்றடைந்து வழிபடும் மெய்யடியார் களுக்கு வழங்கும் திருவருளை (மேலே கூறியவாறு, மயில் வாகனரே! ஆறெழுத்து வடிவினரே! பழநிகுமரப் பெரு மானே என்று அழைத்த ஒன்றையே கருதி) தந்து ஆட் கொள்வீராக; என்பதாம்.

பங்குனி உத்திர மலர்.

பழநி ஸ்ரீ ஞானதண்டாயுதபாணி சுவாமியின் அடியார்களுக்கென்று விளங்கும் அவர்தம் திருவடிப்போதென மலரும்இந்தப் "பங்குனிஉத்திரச் செந்தமிழ் மலர்" அப்பெருமான் அடியார்களின் சிந்தைக்கினிய செவிக்கினிய ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய்மலர்ந் தருளிய திருப்புகழ் முதலிய அருட் பனுவல்களையும், பொருட்பெற்றி வாய்ந்த கட்டுரைகள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டு மிளிர்வது; அன்பர்கள் சிந்தைக்கினிய விருந்தாகவும் கைக்கணியாகவும் உள்ளது.

இது, நமது முருகப்பெருமானுடைய பங்குனி உத்திர நல்விழாவிலே மலர்ந்ததாகலின் பங்குனி உத்திர மலர் என்று பெயர் பெறும்.

பங்குனி உத்திரம்.

பங்குனி உத்திரம், பங்குனி மாதம் பூரணையுடன் கூடிய உத்திரத் திருநாளாகும். இந்த நாள் சிவபெருமானுக்குரிய கார்த்திகைத் திருநாளைத் திருவண்ணுமலை முதலிய தலங்களில் சிவபெருமானுக்குங் கொண்டாடுதல்போல "சிவபெருமானே முருகப்பெருமான்" என்னும் அபேதம் பற்றிப் பல முருகப்பெருமானது திருத்தலங்களிலும் அவருக்குரிய திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

*   *   *

பங்குனி உத்திரத் திருநாள்.

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செம் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணுதே போதியோ பூம்பாவாய்
(ஞானசம்பந்தர்)

*   *   *

ஆராய்ந் தடித்தொண்டர் ஆணிப்பொன் ஆரூர் அகத்தடக்கிப்
பாரூர் பரிப்பதம் பங்குனி உத்திரம் பாற்படுத்தான்
ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீணு டறியுமன்றே.

நான் யார்?

"பாலகவி" வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார்
தேவகோட்டை

நான் யார்? என்ற வினவுக்கு அவரவர் தகுதிக்கேற்பப் பலரும் பலவாறு விடைகூறுவர். ஆழ்ந்து காணுகின்ற பொழுது, அனைவரது விடையும் சைவசித்தாந்திகளல்லாத பிறர்கூறும் பொழுது பொருந்தாதனவாய் முடியும்.

நமது சமயப் பேராசிரியர்களெல்லாம் இவ்வினவை யெழுப்பி உண்மை விடையறிந்தே உயர்நிலை பெற்றனர். மணிவாசகப் பெருந்தகையார் "நானார் என்னுள்ளமார் ஞானங்களார்" என்று வினாக்களை எழுப்புகின்றார்.

உலகியலிலே ஒருவனைப் பார்த்து, நீ யார்? என்று கேட்டால் மிக எளிதில் 'பழநியப்ப பிள்ளை' என்றோ, 'சுப்பிரமணி முதலியார் மகன்' என்றோ, வேறு விதமாகவோ விடைதந்து விடுகின்றான். இது எம்மட்டில் உண்மையாய் இருக்கமுடியும்? அவனது விடை உடல்பற்றியதா! உயிர் பற்றியதா! உடலும் உயிரும் பற்றியதா? என்றின்னவாதிய துணை வினாக்களை எழுப்பும்பொழுது முதல் வினாவின்விடை தகுதியற்றதாய் முடிகின்றது.

இனி, சமயத் துறையிலே ஒருவனைப்பார்த்து, நீ யார்? என்று கேட்பின் "நான் பிரமம்" (அஹம் ப்ர்ஹ்மாஸ்மி) என்று விடைதருகின்றான். பிரமத்திற்கு இன்ப துன்பம் உண்டா? விருப்பு வெறுப்பு உண்டா? என்பனவாதிய துணை வினாக்களை எழுப்புகின்ற காலத்து முன்னவன் விடையே போல் இன்னவன் விடையும் ஏற்றதற்றதாகின்றது.

இனி மனிதன் பிறந்தநாள் தொடங்கிச் சாமளவும், நான் நான் எனவும், என்னது, என்னது எனவும் உரிமை பாராட்டிப் பேசுவது கண்கூடு. இத்தகைய நான் என்ற பொருளை அறியாது மயங்கி நிற்றலாலேயே ஆண்டவனின் அடிமலர்ப்பேறு பெறுது வாடுகின்றோம். நான் யாரென்பதை உண்மையில் அறிந்தவன் இன்பத்தின் எல்லையாகிய பெரும்பேற்றை எய்தியவன் ஆவான்.

மெய்ம்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தைவித்திப்
பொய்ம்மையாம் களையைவாங்கிப் பொறையெனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையு நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பாராகிற் சிவகதி விளையுமன்றே.

என்று கூறுவர் அப்பரடிகள்.

முற்றத்துறந்த முனிவராகிய பட்டினத்தார் "நான்" என்ற பொருளைத் தேடுகின்றார்; தன்மைப் பொருளாகிய நான், உடலில்தானே யிருத்தல்வேண்டும்; எனவே, "உடலிற் காணப்பெறும் மயிர்த்தொகுதிகளோ? மயிர்கள்பரந்த தோற்பரப்போ? தோலுக்குள்ளிருக்கும் தசையோ? தசையிடை யிருக்கும் குருதியோ? கூறுபடுத்தும் எலும்புகளோ? எலும்புண்ணிற்கும் மூளையோ? உடலகத்திருக்கும் புழுக்களோ?" என்பனவாதிய வினுக்களை எழுப்பித் தன்னைத் தேடுகின்றார்.

எதினுந் தேடியும் யாதினுங் காணுதவராகி, ஆண்டவனை வேண்டுகின்றார். அவரது திருவருள் கைவரப் பெறுகின்றார். உள்ளமாகிய கண்ணை மறைக்கும் மாயையாகிய படலத்தைப் போக்குகின்ற கண்ணுடியாக அத்திருவருள், துணைசெய்கின்றது. ஞான நாட்டம் பெறுகின்றார். ஆண்டவன் தன்மை புலப்படுகின்றது. அதனுள் தன்னையும் பிறரையும் ஆண்டவனது நிலையனைத்தையும் காணுகின்றார். ஆண்டவனை அறியாத மாந்தர், தன்னையுமறியாத தன்மையர் என்ற முடிவை உணருகின்றார். தேடித் தேடொணுத் தேவனுகிய ஆண்டவனைத் தன்னுள்ளே தேடிக் கண்டு, அவனுக்குள்ளே தன்னையும் பிறரையும் எல்லாம் காணுதல், சமயப் பெரியார் காட்டிய வழி. இதனைப் பட்டினத்தாரது திருவிடை மருதூர் மும்மணிக்கோவை,

"மேவிய புன்மயிர்த் தொகையோ வம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணே புண்ணிடை
ஊறும் உதிரப் புனலோ கூறுசெய்
திடையிடை நிற்கும் எலும்போ எலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்
துள்ளிடை யொழுகும் வழும்போ மெள்ளநின்

றூறும் புழுவின் ஒழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ உடம்பிற்குள்
பிரியா தொறுக்கும் பிணியோ தெரியா
தின்ன தியானென் றறியே னென்னை
ஏதினுந் தேடினன் யாதினுங் காணேன்
முன்னம்
வரைத்தனி வில்லாற் புரத்தையழ லூட்டிக்
கண்படை யாகக் காமனை யொருநாள்
நுண்பொடி யாக நோக்கி யண்டத்து
வீயா வமரர் வீயவந் தெழுந்த
தீவாய் நஞ்சைத் திருவமு தாக்கி
யிருவர் தேடி வெருவர நிமிர்ந்து
பாலனுக் காகக் காலனைக் காய்ந்து
சந்தன சரள சண்பக வகுள
நந்தன வனத்திடை ஞாயிறு வழங்காது
நவமணி முகிழ்த்த புதுவெயி லெறிப்ப
எண்ணருங் கோடி யிருடி கணங்கட்குப்
புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத பொருவிடைப் பாக
மங்கை பங்க கங்கை நாயகநின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும்
என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை யனைத்தையும் கண்டே னென்னை
நின்னைக் காணா மாந்தர்
தன்னையுங் காணாத் தன்மையோரே"

என்ற பாடலிற் கூறுகின்றது.

இவ்வாறு பெரியார் சென்ற வழியே "நான் யார்?" என்ற வினவுக்கு விடையறிந்து பயனெய்துவது நமது கடமையாகும்.

நலம் பெருகுக.

C. KRISHNAMOORTHY MUDALIAR.
27 MAY 1943

செய்தித் திரட்டு.

(வித்வான், ரா. சா. மயில்சாமி.)

பழநி, நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி ஆண்டுவிழா.

13-2-43 காலையில் மாணவர்களின் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. பாடசாலை தேகப் பயிற்சி ஆசிரியர், ராஜம் அவர்களும், மற்ற ஆசிரியர்களும், மற்ற அன்பர்களும் இப் பகுதியில் மேற்கொண்ட முயற்சியும் உதவியும் பாராட்டற்பாலது.

மாலையில் பாடசாலையின் முன்புறம் அமைக்கப்பெற்ற பூம் பந்தரில், முனிசிபல் கமிஷனர் உயர்திரு. புருஷோத்தம சாஸ்திரியார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, ஈரோடு பெருஞ் செல்வர், வி. வி. சி. ஆர். முருகேச முதலியார் அவர்கள், ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்து, கல்வியின் தேவை, வளர்க்கும் முறை, பெற்றோர் மற்றோர் கடமை இவைகளைக் குறித்து முன்னுரையாகச் சில கூறினர். தொடக்கத்தில் கடவுள் வணக்கம், தமிழ் மொழி வாழ்த்து மாணவர்களால் பாடப்பட்டன.

'எச்சம்' 'பழநித்தல வரலாறு' என்னும் பொருள்கள் பற்றி மாணவச் சிறுமிகள் உரையாடல் புரிந்தனர். தலைமையாசிரியர், கே. பாலசுப்ரமண்யம் அவர்கள், பாடசாலையின் ஆண்டறிக்கை வாசித்தார்கள். அதில், பாடசாலையின் தோற்றம், வளர்ச்சி, வரவு செலவு முதலியவற்றுடன், மாணவர் விடுதி ஒன்று இன்றியமையாதது என்றுங் கண்டிருந்தது.

வக்கீல், திரு. சுந்தரராஜ ஐயர் அவர்கள், பாடசாலையின் வளர்ச்சியையும், கல்வித் தேர்ச்சியையும் பாராட்டிப் பேசியதுடன் ஒவ்வொருவரும் மக்கள் கல்வியில் கருத்தைச் செலுத்தல் முதற் கடமை என நகைச்சுவை தோன்றச் சொற்பொழிவாற்றினர்.

ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான நிர்வாகத் தலைவர் கல்வியைக் குறித்துப் பலபடப் பேசி "ஒழுக்கம் வளர்க்க; பிறர் மனம் நோகச் சொல்லற்க; செய்யற்க; நற்காரியங்களில் தாராள சிந்தை காட்டுக; ஆண்டவன் அருள்க" எனப் பெருஞ் சொற் பெய்தனர்.

தலைவர் ஆண்டுவிழாவில் கலந்துகொண்டதற்கு மகிழ்வதாகவும், "முனிசிபல் கமிஷனர், தேவஸ்தான நிர்வாகத் தலைவர் இவ்விருவரின் ஒன்றுபட்ட முயற்சியால் இப் பழநி நகரின்கண் பல

நன்மைகள் விளைதல் கூடும்'' என்று உண்மை கூறி மாணவர் விடு திக்குத் தன்னுலான பொருளுதவி புரிவதாக வாக்களித்தனர். பின்னர் போட்டியில் வெற்றிபெற்றவர், கல்வியில் முதன்மையாகத் தேர்ச்சியுற்றவர், பாடல், உரையாடல்கள் புரிந்தவர் ஆகிய மாணவர்கட்குப் பரிசுகள் வழங்கினர்.

வந்தனோபசாரத்துடன் விழா இனிது நிறைவேறிற்று,

* * *

ஆண்டவன் பார்க்கு.

இதுகாலை, இப்பழனுபுரியின் இருபெருங் கண்மணிகள் போன்று இலங்குபவர்கள் முனிசிபல் கமிஷனர், மறைத் திரு. புருஷோத்தம சாஸ்திரியார் அவர்களும், ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான நிருவாகத் தலைவர், சைவத் திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்களுமே ஆவர். இவ்விரு பெருந்தகையாளரின் அரிய முயற்சியால், அடியார் பொருட்டு, தெய்வப் பழநித் திருமலையின் வடக்கு கிரிவீதியில் ஓர் அழகிய பார்க்கு காட்சி அளிக்கின்றது. உடுமலை, பெருநிலக்கிழவரும், தமிழ் வள்ளலுமாகிய உயர்திரு. U. S. சிவசுப்பிரமணியக் கவுண்டர் அவர்கள் இப்பார்க்கில் அமைக்க ரேடியோ ஒன்றை உவகையுடன் வழங்கியுள்ளார்கள்.

22-2-43 திங்கட்கிழமை மாஜி அமைச்சர், சர். பி.டி. ராஜன் பார்-அட்-லா அவர்கள், கமிஷனர் திரு. புருஷோத்தம சாஸ்திரியார் அவர்களின் வேண்டுகோளை ஏற்று தலைமை வகித்துப் பார்க்கின் திறப்புவிழாச் சொற்பொழிவாற்றினர்.

பிறகு தேவஸ்தான நிருவாக அதிகாரி, ஜே.எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்களும், திண்டுக்கல் வக்கீல் திரு. சண்முகநாதன் அவர்களும், பட்டுக்கோட்டை தோழர், அழகிரிசாமி அவர்களும், பார்க்கின் பலநலன்களைப்பற்றியும், தற்காலத்தில் ரேடியோவின் அவசியத்தைக் குறித்தும் பெருஞ் சொல்லாற்றினர். முனிசிபல் சுகாதார அதிகாரி அவர்களின் நன்றிகூறலுடன் விழா நன்கு நிறைவுற்றது.

* * *

அன்பர் பணி.

மலைப்படி விசாலப்படுத்துதல் :—

நமது மாசிக் கிருத்திகை மலரில் குறிப்பிட்டுள்ள அன்பர்கள் தவிர அடியிற் குறிப்பிட்ட அன்பர்களும் தனித்தனியே ஒருநூறு வெண் பொற்காசுகளும், அதற்கு மேலும் தந்து உதவியுள்ளார்கள். அவர்களுக்கும் நமது ஆண்டவன் அருள் நிலைபெறுவதாக.

திரு. கோவை, K. V. கிருஷ்ண ராவ்,	ரூ. 100-0.
திருமதி. அடையாறு ருக்மணி தேவி,	100-0.
திருப்பூர், S.R M. தியாகராஜ செட்டியார்,	101-4.
ஆறுதொழுவு, S. கிருஷ்ணசாமி கவுண்டர்,	100-0.

பழநி, துளுவ வேளாளர் சங்கம் முதலாவது ஆண்டுவிழா.

13-3-43 சனிக்கிழமை, பழநி அடிவாரத்திலுள்ள துளுவ வேளாளர் மடத்தில், ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான நிருவாக அதிகாரி, உயர்திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்களின் சீரிய தலைமையில் மேற்கண்ட விழா நடைபெற்றது.

தலைவர், துளுவ வேளாளர் யார்? என்பதை ஆராய்ச்சி முறையில் எடுத்துக் காட்டியதுடன், அம்மரபிற் போந்த பெரியவான் கவிராயர், அவர் குமாரர் பழநித்தல புராண ஆசிரியர், பாலசுப்பிரமணியக் கவிராயர் முதலியவர்களின் பெருமையைக் கூறி அக்குலத்து உதிக்கும் பேறு பெற்றவர் யாவரும் அன்னாரின் சந்ததியார் என்பதை உலகுக்குக் காட்ட கல்வியில் மேம்பாடடைதல் வேண்டும் என வற்புறுத்தி அப்பெருமரபுக்கு அருள்புரிய ஆண்டவனை இறைஞ்சினர். தொடர்ந்து, மதுரை உயர்திரு. எம். கோபால கிருஷ்ணன் அவர்கள், செல்வி T. சரஸ்வதிபாய், மதுரை, உயர்திரு. ராம. பா. இராமையா பிள்ளை அவர்கள், ஈரோடு, தமிழ்ப் பண்டிதர், உயர்திரு. ந. சிவபாதஹிருதயம் பிள்ளை அவர்கள் முறையே, "சங்கமும் அதன் அவசியமும், இந்தியப் பெண்களின் நிலைமை, சமூக நலம், முருகன் புகழ்" என்பன குறித்துச் சொன்மாரி பெய்தனர். தலைவர் முடிவுரைக்குப் பின் ஆசிரியத் தோழர் தங்கரத்தினம் பிள்ளையவர்கள் நன்றிகூற, விழா முற்றுறக்கண்டு மகிழ்பூத்தது.

"பழநி ஆண்டவர்"

மகாமகோபாத்தியாய முதுபெரும் புலவர், பண்டிதமணி,
மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் எழுதியது.

பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானத்து வெளியீடாகப் "பழநி ஆண்டவர்" என்னும் பெயரால் கார்த்திகை நாள்தோறும் வெளிவரும் திங்கள் வெளியீட்டிதழைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இதன் ஆசிரியரும், உதவியாசிரியரும் சிவநெறியொழுகும் சிறந்த சைவசீலமுடையராவர். ஆசிரியராகிய திரு. ஜே.எம்.சோமசுந்தரம்பிள்ளை பி.எ.பி.எல்., அவர்கள் தமிழ் ஆங்கிலம் இரண்டினும் சிறந்த பயிற்சியும் கடவுட் பத்தியும் முருகப்பெருமானிடத்துச் சிறந்த பேரன்பும் உடையவர்கள்; இறைசெயவாற்றும் பணியில் சிறந்த திறமையும் ஈடுபாடும் உடையவர்கள்; தேவாலய நிர்வாகத்திற்கு இவர்களை யொத்த தகுதியுடையாரைப் பெறுதலரிது. உதவியாசிரியராகிய சிவத்திரு. ஈசான சிவாசாரியர் அவர்கள் சைவநூற் பயிற்சியும், சிவாகமத் தெளிவும் கைவரப் பெற்றவர்கள். இவ்விரு பேரன்பர்களும் ஆசிரியராக "பழநி ஆண்டவர்" என்னும் பெயரைத் தாங்கி உலவும் இவ்விதழ் எல்லா வகையானும் சிறந்ததாகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

இவ்விதழின்கண் "திருப்புகழ், பழநிப்பதியின் சிறந்த வரலாற்றுப் பகுதிகள், சைவசமய உண்மைகள்" முதலியன உள்ளுறையாகத் திகழ்ந்து இன்புறுத்துகின்றன. இவ்விதழ் எதிர்காலத்தில் தமிழ்ச் சைவவுலகிற்குச் சிறந்த உண்மைகளைப் புலப்படுத்திக் கடவுட் கொள்கையை வளர்வித்து எல்லா மக்களுக்கும் நலம் பயக்கும் வண்ணம் ஆண்டவன் திருவருள் முன்னின்று துணைபுரிகவென வேண்டுகின்றேன்.

வாழ்த்துப்பா.

அருண்மிகு பழனி யாண்டவன் பெயரால்
அவன்றிருக் கார்த்திகை தோறும்
பொருண்மிகு புகழ்ப் பாமாலையும் புலனிற்
பொருந்திய கட்டுரை பலவும்
தெருண்மிகத் தாங்கி வெளிவருந் திங்கட்
டாளவன் திருவருட் பாங்கால்
இருநிலத் தமிழ்தி னியைந்துநல் லன்பர்
இதயத்தின் நீடுவா ழியவே.

பழநிப் பெரியார்கள்.

திரு. பாலசுப்பிரமணியக் கவிராயர்:

புலமையிற் சிறந்த துளுவர்தங் குலத்தான்
புகழ்பெரியவன் கவிராயன்
சொலவரு மதலைச் சங்கமன் வால
சுப்பிரமணியனுங் கவிஞன். —பழநித்தலபுராணம்.

திரு. பாலசுப்பிரமணியக் கவிராயர் இற்றைக்குச் சற்றேறக்குறைய 300 ஆண்டுகட்கு முன்னர் இப்பழநியின் கண் துளுவவேளாளர் குலத்தில் புலமையிற் சிறந்த பெரியவான் கவிராயருக்கு அருந்தவச் செல்வராய்த் தோன்றி கல்வி கேள்வி உடையவராய் கவி பாடுவதில் வல்லவராய்த் திகழ்ந்தார். இவர் பாடிய நூல்கள், கவிகள் பல. ஆனால் இப்பொழுது நமது புண்ணிய வசத்தால் கிடைத்திருப்பது பழநித் தலபுராணம் ஒன்றுதான். நமது கவிராயருடைய ஒழுக்கம், கல்வி மேம்பாடு, புத்திக்கூர்மை, நூல் ஆராய்ச்சி, சமயநூல் படிப்பு, சைவசித்தாந்தத் தேர்ச்சி, கற்பனைத் திறமை, உலக இயல்பின் அறிவு, பொருளைவிள்க்கும் சொற்போக்கு முதலியவை பொருந்தி உள்ள பழநித் தல புராணக்கவிகள் எல்லாம் நன்றாகக் கற்றுணர்ந்து, மகிழ்ந்து பெரும்பயன் அடையத்தக்கவை.

"நல்லனபுரி வைகாவூர் நாடு" "மல்லலம் பழனி மூதூர்"
"கழனிவளம் திகழ் பழனி" "மெய்த்தமிழ்"
"தமிழ்த் தெள்ளமுதம்" "ஞானச்சலராசி படிந்த தமிழ்"
என்று நெஞ்சாரப்பாடும் இவ்வறிஞர் நாட்டுப்பற்றும் பிறப்பகப் பற்றும், தாய்மொழிப் பற்றும் முற்றும் பெற்றவர்.

இப் பெரியாரின் சந்ததியார் பல வளத்துடன் பழநிபுரியில் வாழ்ந்து வருகின்றனர்.

மற்றும் பழநியில் அவதரித்த பெரியார்களின் சரித்திரக் குறிப்புக்கள் தொடரும்.

பழநி முத்துக்குமாரசாமி வண்ணம்.

தனன தந்தன தானத் தனனு-தனந்-தன
தனன தந்தன தானத் தனனு-தனந்-தன
தனனு தன தத்த
தனனு தன தத்த
தனனு தன தத்த - தானன தான
தானதா தனதனன தானனு.

1. கருணை தங்கிய மாதுத் தமியாள்-பரம்-பரை
சிவம தங்கிமெய்ஞ் ஞானத் துறைவோர்-நிதம்-பணி
மலைமா துமை சத்தி
திரிகோ *ணவி சித்ர
மறைமா முடி யுற்ற - வாதிவ ராகி,
பரிபு ரங்களு மாலித் திட்வே-ததிந்-திமி
தகத செந்தண தாதிக் கிதிதோ-தனஞ்-செகு
தகுதா வென நித்த
ருடனே நட மிட்ட
திகழ்பூ ரண நித்ய - ரூபகல் யாணி,
கருதி †முன்சம ராலுக் கிரமே-செயுங்-கரு
மயிட னும்பட வேமர்த் தனமே-புரிந்-திடு
செயமே பெறு ருத்ரி
முனிவோர் பர முத்தி
பெறவே யருண் முக்ய-காரண வாலை,
சோதிபார் வதியருள்செய் பாலனு; 1/8

2. கதிர வன்பல கோடிப் ரவைபோ-லுயர்ந்-திடு
அழகு தங்கிய நீதிப் பொருளா-யியங்-கிய
திரிலோ கம துற்ற
டிசரா சர முற்றும்
அருள்வே திய கர்த்த-ரானவி லாச
பனக கங்கண நாதற் கினிதாய்-நலம்-பெறு
பிரண வந்தனை யோதிப் புகழே-விளங்-கிய

பார-ம். * வசித்ர. † டுஞ்சம.

குருவா யதி கப்ர
பலமா யுரு வுக்குள்
உயிரா கிய மெய்ச்ச-தாசிவ-ரூபர்,
கமல ரஞ்சித பீடத் தினிலே-வளர்ந்-தருள்
பிரம னும்பய மேயுற் றிடவே-சிரந்-தனில்
இடியே றென மொத்தி
யுளமே வெறு வெட்க
முறவே சிறை வைத்த-நாதத யாளர்,
தூயவா *ரிசவருண பாதனுர்; 1/4

3. தருண கிண்கிணி யோசைப் படவே-நடம்-புரி
மயிலி லங்கிய நீபத் தொடையான்-மதம்-பெறு
சமணோர் தனே வெட்டி
விடுவார் சிவ முற்ற
சமயா திபர் பெற்ற-மாநெறி வாழ,
மகிமை தங்கிய சேவற் கொடியோ-னிறைந்-திடு
முனிவ ரும்பர்கள் கூர்துத் தியமே-புரிந்-திடு
வரிதா கிய வெற்றி
முரசோ ‡டியல் துர்க்கை
துடிகா ளிய மிக்க-பேரிமல் லாரி,
தவில்க டுந்துமி நாதித் திடவே-ரதந்-தனில்
இனிது சென்றசு ரேசத் திரளே-சிதைந்-தது
கொடிதா முறி பட்டு
முடியோ டிட வெட்டி
யுடல்கூ றிடு வச்ர-வேல்புனே வீரர்,
ஆதிநா ரணன்மருக ராயினர்; 3/8

4. தருநி றைந்தநி †லாவிற் புதிதா-யுயர்ந்-திடு
ககன மண்டிய சோலைக் கிடையே-பறந்-தொரு
வரியோர் புனே யுற்று
மதுவே பா ருப்பின்
னரியாய் வெறி யுற்று-நீள்கனி யோடு
உரிய கொம்பினி லேசுற் றிடவே-யுதிர்ந்தது
§பனச வின்கனி மோதிப் படவே-யுடைந்-தது

*ரிசைவருண. ‡டியர்துற்கை. †லாவிப். §பனசையுங்கனி.

மதுவா ரின மொய்த்த
வயல்சேர் கழை முத்து
விளேவே பெரு கிப்பின்-மாவள மீது,

தமனி யம்புனே மேடைக் கழகாய்-நிமிர்ந்-திடு
துவச முங்கடை வீதிக் கழகாய்-மணந்-தரு
ருதுமா மணி மெத்தை
யதுவோ வெகு சித்ர
வடிவார் பழ னிக்கு-மாரசு வாமி,
ஆகமா சிவகிரியின் மீதில்வா; ½

5. திருவு டன்பிறை சூகக் குழல்மே-லணிந்-திடு
தொடையி லங்குபிர காசக் குயிலே-நயந்-தரு
அமுதே குண ரத்ன
மணியே செக மெச்சி
ரதியே மத னுக்கு-மோகினி யான,

சரச ரஞ்சித மேவிர்ப் பனமே-சுகந்-தரு
மினிய சுந்தர மேபர்ப் பினியே-கனிந்-திடு
ரசமே யென வுற்ற
மொழியே சடி கிட்ட
வருவாய் மன துக்குண்-மேவிய வாசை,

தினமு நின்பத சேவைக் கிதமே-புரிந்-திடு
பணிக ளுஞ்செய்கு வேனற் புதமே-மதன்-தொடு
கணேயோ வெதி ரிட்டு
வருதே விர கச்சன்
னதமீ றுது சத்ய-மாமடி பாவி,
நீதியோ தயவுபுரி வாய்மினே; ⅝

6. திறம தங்கிய மேருக் கிரிபோ-லுயர்ந்-திடு
தனம தெண்கர மீதிற் றருவா-யரம்-பையி
னடிமா னிய முற்றும்
விளேவே றவை கட்டி
யுழுதே பயி ரிட்டு-மேயிரு போகப்,

பலனு மிங்கித மாகப் பெறலா-மிசைந்-திடு
மிதழி லங்கிய தேனேத் தருவாய்-சுகம் பெற

KRISHNAMOORTHY MUDALIAR
16
27 MAY 1943
SHIYALI.

யெனையே யடி மைக்கொள்
ளடியா தகி மெத்த
மயலோ கொடி துற்ற-தேசுக லீலை,
திறமு டன்செய்கு வேனுத் தரவே-புரிந்-திடு
மனம தன்புற வேசற் றருள்வா-யிதம்-பெற
வடகா சியின் மிக்க
நதியா டின் முத்தர்
பெருமா தவ சித்தி-*தேர்பல னேது,
நீயலா தெனமகிமை கூறியே; ¾

* X X X X

சோதிடார் வதியருள்செய் பாலனர்
தூய்வா ரீசவருண பாதனர்
ஆதிகா ரணன்மருக ராயினர்
ஆகமா சிவகிரியின் மீதில்வாழ்
நீதியோ தயவுபுரி யெய்மினே
நீயலா தெனமகிமை கூறியே

* X X X
X X X

பழனிமுருகப்பிரான் பேரில் பாடிய "முருகையன் வண்ணம், குராவடி வேலன் வண்ணம், முத்துக்குமாரசாமி வண்ணம்" ஏட்டுப் பிரதிகள் பழனித்தாலூகா புளியம்பட்டி கர்ணம், திருவாளர் ஆ. அம்மையப்ப பிள்ளையவர்களிடமிருந்து எனக்குக் கிடைத்தன. இவ்வேடுகளில் ஆக்கியோன் பெயர் குறிக்கப்படவில்லை; ஆகையால், நூலாசிரியர் பெயர்களைத் தெளிவாகச் சொல்ல இடமில்லை. என்றாலும் இந்நூல்கள் விசையகிரித்துரை பாடியதெனப் பொதுப்படக் கூறப்படுகிறது.

இவ்வண்ணத்தினும் இதற்கு முன்மலரில் வெளியிட்டுள்ள "குராவடி வேலன் வண்ணத்"தினும் இறுதியிலுள்ள "கால் கலை" பாகங்கள் மேற்குறித்த ஏடுகளிலில்லை. முழு வண்ணமுமுள்ள ஏடுகள் வைத்திருப்பவர்கள் பழநி தேவஸ்தானம் நிருவாக அதிகாரியவர்கள் பேருக்கு அனுப்பிக்குறைவைநிறைவேற்ற வுதவிபுரியும்படி கேட்டுக்கொள்கிறேன்.

த. அ. அருணசலம்.

பா-ம். * குறுபல.

பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம்
மலைக்கோயில் காரியாலயத்தில் கட்டவேண்டிய
கட்டணங்களின் விபரம்.

1.	ரூ. 1-முதல் ரூ. 20-வரை பெருமான பஞ்சாமிர்த அபிஷேகம் செய்ய	ரூ.	2—4—0
2.	ரூ. 21-முதல் ரூ.100-வரை பெருமான பஞ்சாமிர்த அபிஷேகம் செய்ய	ரூ.	3—4—0
3.	ரூ. 100-க்குமேல் பெருமானமுள்ள ஷை அபிஷேகம் செய்ய	ரூ.	6—4—0
4.	ஷை பஞ்சாமிர்த அபிஷேக சொர்ண புஷ்பம்	ரூ.	1—0—0
5.	பால்,சந்தனம்,விபூதிஅபிஷேகம்செய்ய	ரூ.	0—4—0
6.	ஷை அபிஷேகங்களுக்கு சொர்ணபுஷ்பம்		0—4—0
7.	தங்கக்கவசஸாத்துப்படிக்கு கட்டணம்	ரூ.	25—0—0
8.	அம்மன் அலங்காரம் ,,	ரூ.	3—0—0
9.	இராஜ அலங்காரம் ,,	ரூ.	1—8—0
10.	வேட அலங்காரம் ,,	ரூ.	1—8—0
11.	சாத்துப்படி பரிவட்டம் ,,	ரூ.	0—4—0
12.	அலங்கார பரிவட்டம் ,,	ரூ.	1—0—0
13.	கலியாண காணிக்கை	ரூ.	1—4—0
14.	தீர்த்தக் காணிக்கை	ரூ.	1—4—0
15.	திருவிளக்குக் காணிக்கை	ரூ.	1—4—0
16.	சூலக் காணிக்கை	ரூ.	0—4—0
17.	சத்திய காணிக்கை	ரூ.	1—4—0
18.	தலைச்சுமை அபிஷேக சாமான் தூக்குக்கூடை 1-க்கு	ரூ.	0—0—3
19.	காவடி 1-க்கு	ரூ.	0—0—6

1.	திருவனந்தல் (விஸ்வரூப தரிசனம்)		முற்பகல்	7	மணி
2.	முதல் காலை விழாபூஜை		,,	7-15	,,
3.	சிறுகாலை சந்தி	,,	,,	8	,,
4.	காலை சந்தி	,,	,,	9	,,
5.	உச்சிக்காலம்	,,	நடுப்பகல்	12	,,
6.	சாயரட்சை	,,	பிற்பகல்	6	,,
7.	அர்த்தஜாமம்	,,	இரவு	9	,,

பழநி ஆண்டவர்

முருகனடியார்களின் தமிழ் விசேஷ வெளியீடு.

பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான காரியாலயத்தினின்று மாதக் கிருத்திகைதோறும் வெளிவருவது. தமிழ் மக்களின் தாய்மொழிப் பண்பையும், சமய உணர்ச்சியையும் பெருக்குவது. தமிழ் உலகத்தில் ஒவ்வொரு மக்கள் வீட்டிலும் உலவும் அரிய வெளியீடு.

தனிப்படி அஞ்சற்கூலி உள்பட அணா $2\frac{3}{4}$.

ஆண்டுவரி அஞ்சற்கூலி உள்பட ரூ. 1–12–0.

PALNI: the Sacred Hill of Muruga, (in English)
by J. M. Somasundram Pillai, (fully illustrated) As. 12,

கந்தர்சஷ்டி நினைவு மலர் 1942	தனிப்படி அ. 1	பத்துபடிகள் அ. 8
சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறும் உள்ளுறைப் பொருளும்	அ. 1	,, அ. 8
திருஞானசம்பந்த நாயனார் ,,	அ. 2	,, ரூ. 1
திருக்கார்த்திகை, மற்றும் சிறப்புக்களின் வெளியீட்டுத் தொகுதி		அ. 2
பழநி முருகையன் வண்ணம்		அ. 2
பழநிப் பிள்ளைத் தமிழ்		அச்சில்
வையாபுரிப் பள்ளு		அச்சில்
சைவசித்தாந்த விளக்கமும், சிவாலய பூசாமகோற்சவ தத்துவ விளக்கமும்.		அச்சில்

மேற்குறித்தவை பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம் காரியாலயங்களில் பெறலாம்.

ஸ்ரீ ராதாகிருஷ்ண விலாஸ் பதிப்பகம், பழநி.